# ...மனையிறவு முகாம் படையினருடன்
# ...னொலித் தொடர்பு ஏற்பட்டுள்ளதாம்


...ங்கள் நாளேடு — விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

...ரசு 05 ஒலி 246 பிரசோற்பதி ஆடி 16 (01 - 08 - 1991) வியாழன்


## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

ஆனையிறவு இராணுவ முகாமைப் படையினர் நாளை சென்றடைந்து விடமுடியும் என பாதுகாப்பு அமைச்சு நேற்று கொழும்பில் தெரிவித்தது. படையினர் தற்போது முகாமிலிருந்து 2கிலோ மீற்றர் தூரத்தில் நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. படையினர் தற்போது ஆனையிறவு முகாமிற்கு துப்பாக்கிச் சூடு நடாத்துமளவு தூரத்தில் நிலை கொண்டுள்ளதாகவும் புலிகளால் முகாம் தாக்கப்பட்டால் பின்புறமாகத் தாக்குதல் நடாத்தக் கூடிய நிலையிலேயே படையினர் தங்கியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனையிறவு முகாமின் தொலைத் தொடர்புக் கம்பத்தைத் தாம் பார்க்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகப் படையினர் தெரிவித்துள்ளனர். இதன்மூலம் முகாமிலுள்ளவர்களுடன் நேரடிவானொலி தொடர்பை ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

# ...ன்னேற முயன்ற படையினருடன்
# ...டல் நீரேரிப் பகுதியில் கடும் மோதல்

## இராணுவத்தினர் தொடர்ந்தும் ...வ்விடத்திலேயே நிலைகொண்டுள்ளனர்

ஆனையிறவு முகாமிற்கு அண்மையில் நேற்று முன்தினம் வந்த ...டையினர் நேற்று முகாமை நோக்கி முன்னேற எடுத்த முயற்சியை ...திர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடாத்தினர்.

நேற்று முன் தினம் தாம் ...ரித்து நின்ற இடத்திலி...ந்து படையினர் நேற்றுப் ...லத்த தாக்குதல்களுடன் முன்னேற முற்பட்டனர். இவ்வேளை கடல் நீரேரிப் பகுதியில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் போர் வெடித்தது. சில மணிநேர மோதல்களை யடுத்துப் படையினர் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு அப்பகுதியிலேயே தங்

—04 ஆம் பக்கம் பார்க்க

...லிகளின் பிரான்ஸ் பேச்சாளர்

## ஆனையிறவுப் போருக்கு ...லைவர் பிரபாவே தலைமை

...னையிறவு முகாமைப் ...த்து விடமுடியும் என புலி...ன் பாரிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக நேற்று பி. பி. ஸி. குறிப்பிட்டது.

ஆனையிறவில் நடைபெறும் யுத்தத்தினை தலைவர் பிரபாகரனே முன்நின்று நடாத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை படையினர் ஆனையிறவு முகாமிற்குள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ...லாவத்துறைப் படைகள் மீது ...லிகள் அருள்89 தாக்குதல்

...ரில் நேற்று முன் ... சிலாவத்துறை முகா...து வெளியேறிய படை...து விடுதலைப் புலி... ...க்குதல் நடாத்தினர். ...தாக வங்காலை, ...றை, தள்ளாடி... களிலிருந்து கடும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்து சிலாவத்துறை முகாமிலிருந்து சுமார் 75 படையினர் வெளியேறினர்.

இவர்களை இடைமறித்து புலிகள் அருள் 89 தாக்குதல்களை மேற்கொள்ளவே படையினர் பின்வாங்கி முகாம் சென்றனர்.

## ...ரசின் உணவுத் தடைக்கு ...திர்க்கட்சி கண்டனம்

...ழ்ப்பாணத்திலுள்ள மக்...ளத் திட்டமிட்டே அரசு ...ணி போடுகிறது என நவ...க் கட்சி கண்டனம் ...டுள்ளது.

...தகள் மனோவியல் மட்டும் பாதிக்கப்படவில்லை. தற்போது அரசின் உணவுத்தடையால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டும் எனவும் அக்கட்சி கண்டித்துள்ளது.

## ...ராணுவத்தில் சேருமாறு பிக்குமார் பிரசாரம்

தற்போது ஆனையிறவுப் ...குதியில் நடைபெறும் யுத்தத்...த் தொடர்ந்து சிங்கள ...ஞர்களை இராணுவத்...சேர்ப்பதற்குப் பௌத்த ...மார் மும்முரமான பிர...த்தில் ஈடுபட்டுள்ளனர். ...னையிறவுப்போரில் எமது சிங்கள இளைஞர்கள் தினமும் அழிந்து கொண்டிருக்கிறார்கள் அதனால் இராணுவத்தில் சேர்வதற்கு சிங்கள இளைஞர்களும், யுவதிகளும் முன்வர வேண்டும்என கூட்டம்வைத்து பிரசாரம் செய்துவருகிறார்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழகப் பொலிஸாரும் மீனவர் படகில்!

தமிழக இராமேஸ்வர மீனவர்கள் இன்று முதல் கடலுக்குச் செல்லும் போது படகில் பொலிஸ் கான்ஸ்டபிளை ஏற்றிச்செல்ல வேண்டும் என அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

மீனவர் படகில் செல்லும் இப்பொலிஸ் கான்ஸ்டபிள்கள் அடிக்கடி கரையில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வர் எனவும் தெரிவிக்கப்...டுள்ளது.

இதேவேளை இந்... எல்லை... ...டிச் செல்ல முயலும் மீனவர்கள் கைது செய்யப்படுவர் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

## இந்திய வம்சாவளியினரை திருப்பி அனுப்ப ஏற்பாடு

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் இலங்கைக்கு அனுப்பப்பட்ட பின்னர் இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளியினரை இந்தியாவுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இந்திய அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின்போது இலங்கையிலுள்ள இந்திய

—04 ஆம் பக்கம் பார்க்க

## அ. தி. மு. க - காங்கிரஸ் உறவில் முறுகல்நிலை?

அ தி. மு. க விற்கும் இந்திரா காங்கிரசுக்கும் இடையில் உள்ள உறவை சீரழிக்க வேண்டாம் என முன்னாள் தமிழக காங்கிரஸ் தலைவர் பழனியாண்டி கோரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சர் குமாரமங்கலத்தை ராஜினாமாச் செய்ய வேண்டாம் எனக் கோரும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இன்று முதல் முரசொலி ரூபா 5-00

அன்பார்ந்த வாசகர்களே!

பத்திரிகைத் தாளின் விலையும், எரிபொருளின் விலையும் பன்மடங்கு உயர்ந்து விட்டன. மிகுந்த தயக்கத்துடன் இன்று தொடக்கம் முரசொலியின் விலையை 50 சதத்தால் உயர்த்துகிறோம்.

செய்திப் பெறுமதியாலும், சிறப்பம்சங்களாலும் இவ்வதிகரிப்பை ஈடுசெய்யவுள்ளோம் என்பதை அறியத்தருகிறோம்.

நிர்வாகம்

## ஜூன் மாத பென்சன் வவுச்சர் வந்தது

சிவில், ரயில்வே ஜூன் மாதப் பென்சன் வவுச்சர்கள் செயலக ஓய்வூதியக் கிளைக்கு வந்து சேர்ந்துள்ளதாகவும், சம்பந்தப்பட்டவர்களுக்கு விரைவில் அனுப்பப்படவுள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## கொழும்பில் தேங்கிக் கிடந்த பாஸ்போட்டுக்கள் வந்தன

பாஸ்போட்டுக்கு விண்ணப்பித்த யாழ் மாவட்டப் பகுதியைச் சேர்ந்த சிலருக்கு பாஸ்போட்டுக்கள் கொழும்பு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

யாழ் அரசாங்க அதிபர் அண்மையில் கொழும்பு சென்றபோது குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுடன் இது சம்பந்தமாக நடாத்திய பேச்சுக்களை

— 4 ஆம் பக்கம் பார்க்க

புதிய கல்வியாண்டிற்கு

## யாழ் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்யும் மாணவர் குறைவு

யாழ் பல்கலைக்கழகத்தில் புதிய கல்வியாண்டில் ஒவ்வொரு பீடத்திலும் பதிவு செய்யும் மாணவர்களின் தொகை குறைவாகவுள்ள

... 4 ஆம் பக்கம் பார்க்க

# நம்பிக்கை நாணயத்தின் சின்னம் → ஷப்ரா




## நிதித்துறையில் உங்கள் நண்பன்

**ஷப்றாவின்**

முதலீட்டுத் திட்டங்களில் சேர்ந்து கொள்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி வளமாக்குங்கள்.

**ஷப்றாவின்**

துரித வளர்ச்சியும் சிறந்த முகாமைத்துவமும் உங்கள் முதலீடுகளுக்குச் சிறந்த பாதுகாப்பை அளிக்கின்றன.

Term Deposit - நிலையான வைப்பு

| Period - Months காலம் - மாதம் | மாதாந்தம் Monthly | முதிர்ச்சியில் Maturity |
|---|---|---|
| 03 | — | 17 வீதம் |
| 06 | — | 18 வீதம் |
| 12 | 18 வீதம் | 20 வீதம் |
| 24 | 21 வீதம் | 23 வீதம் |
| 36 | 22 வீதம் | 24 வீதம் |

வைப்புச் சான்றிதழ் - Certificate of Deposit

| Period - Month காலம்-மாதம் | Cost of Certificate சான்றிதழின் பெறுமதி | | | | Rate வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|
| 06 | 4, 588-00 | 9, 176-00 | 45, 872-00 | 91, 744-00 | 18 வீதம் |
| 12 | 4, 133-00 | 8, 265-00 | 41, 323-00 | 82, 645-00 | 21 வீதம் |
| 24 | 3, 379-00 | 6, 757-00 | 33, 784-00 | 67, 568-00 | 24 வீதம் |
| Value at Maturity முதிர்ச்சியில் பெறுமதி | 5, 000-00 | 10,000-00 | 50, 000-00 | 100,900-00 | |

**பணிப்பாளர் சபை**

திரு. எஸ். பீ. ஈ. கருணாரட்ண
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B (Lond) முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்
A. I. B. (Lond) பொதுமுகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி
B. A. (Hons)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 29-[illegible]-1978 லைசென்ஸ் இல: NBS / R / 90 / 021

# ஷப்றா

யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 22073.

2, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை,
கொழும்பு 4.
தொலைபேசி: 598087 90.

08019


## 40 வர்த்தகர் சிக்கினர்

கொழும்பு மருதானையில் இரகசியமாகச் சூது விளையாடிக்கொண்டிருந்த நாற்பது முதலாளிகளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களில் சிலர் சூதாட்டத்தில் தோல்வி ஏற்பட்டதால் தமது கார்களைப் பணயமாக வைத்துச் சூது விளையாடியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

'கிளப்' என்ற பெயரில் இந்தச் சூதாட்டக் குகை நடாத்தப்பட்டதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஆடிப்பூரத்தேவி

வண்ணை சிவன் கோயிலில் ஆடிப்பூரத் தேவி மஹோற்சவம் 3 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 11. 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்கள் நடைபெறும்.

11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும், 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு திருவூஞ்சல் விழாவும் நடைபெறும். இதற்கு வேண்டிய ஒழுங்குகளை ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

## முகாமைத்துவ கற்கை நெறி

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்குப் புதிதாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்பொழுது இதற்கான விண்ணப்பங்கள் வந்து உள்ளதால் அக் கற்கை நெறி பயில விரும்புபவர்கள் யாழ் பிரதேச நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இக் கற்கைநெறி இரண்டு வருட காலத்தைக் கொண்டது. விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 15 ஆம் திகதியாகும். (ப-7)

## நாவற்குழியில்

விடுதலைப் புலிகளின் தீவி ஆதரவாளரான நாவற்குழ வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்த சுரேஸ் போர்முனையில் மரணத்தைத் தழுவிக் கொண்டார். இவருக்கு நாவற்குழியில் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ப-5)


## சிறு விளம்பரம்

### விற்பனை

மில்க்வைற் திரவ சவர்க்காரம் (Liquid Soap)ச தேவைக்கும உதவுகிற அரைப் போத்தல் ரூ 45/- பாவித்த வெற்றுப போத்தல் லேபலுடன் திருப்பித் தந்தால் ரூபா 2/- கழிவு "மில்க்வைற்" யாழ்ப்பாணம். 08014

### ஜோதிடம்

வியாழ மாற்றம் ரூபா 6 - 50 எங்கும் விற்பனையாகின்றது. கணித்தவர் பேராசிரியர் சத்தியதாஸன், சித்தன்கேணி. விநியோகஸ்தர்கள் ரகுநாதன் பதிப்பகம், 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 08012

### சேவை

தமிழ், ஆங்கில தட்டெழுத்தும், கிரென்சில் வேலைகளும் செய்து கொடுக்கப்படும். விலாசம் பா - சகிலா, இல. 125, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. யாழ்ப்பாணம். 08015

# முரசொலி

எமது சிந்தனை

01 . 08 . 91

## தார்மீகக் கடப்பாடு

இலங்கை இனப்பிரச்சினை பற்றிய ஓர் அபிப்பிராயத்தைப் பாரதப் பிரதமர் நரசிம்மராவ் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்,

இங்கு நிலவும் நிலைமையைப் பரிசீலித்த பின்பே தீர்மானம் எடுக்க வேண்டுமாம்.

எமது பிரச்சினைகளை நன்கு அறிந்தவர் திரு. ராவ்.

1983 இல் இனவெறியர்களால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது இந்திரா காந்தியின் விசேட தூதுவராக இலங்கைக்கு வந்தவர் அவர். அப்பொழுது இந்திரா அமைச்சரவையில் இவர் வெளியுறவு அமைச்சர்

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களை நேரில் கண்டவர். இலங்கை விடயமாக அப்போது இந்திரா துணிவுடனும், ராஜதந்திரத்துடனும் எடுத்த பல முடிவுகளில் பங்கேற்றவர்.

அன்றைய காலகட்டத்தில் இந்திராகாந்தி எடுத்த முடிவுகள் யாவும் இலங்கைத் தமிழ்மக்களின் அபிலாஷைகளை நன்கு பரிசீலித்து எடுக்கப்பட்ட முடிவுகளாகும்.

இவை யாவற்றையும் நன்கு அறிந்த ராவ் இப்பொழுது பரிசீலனை பற்றிப் பேசுகிறார்.

சிங்கள அரசு இராணுவத் தர்பார் நடத்திக் கொண்டிருக்கிறது. பொதுமக்கள் குடிமனைகள் குண்டு வீச்சினால் அழிக்கப்படுகின்றன. கொக்கட்டிச்சோலைக் கிராமவாசிகள் கொலை செய்து குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆத்மீகத்தை உலகெங்கும் பரப்பியதாகப் பெருமைப்படும் இந்தியா, ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பேணிப் பாதுகாப்பதாகக் கூறும் இந்தியா இந்தக் கொடூரங்களைக் கண்டும் கண்டனம் தெரிவித்ததா?

இவையனைத்துக்கும் ஒரு பார்வையாளராக இருந்து திருப்தி அடையும் இந்தியாவின் போக்கு அதிர்ச்சியையும், வியப்பையும், வேதனையையும் அளிக்கிறது.

மதத்தால், மொழியால், கலை கலாசாரத்தால இலங்கைத் தமிழர்கள் பாரதத்துடன் பிணைக்கப்பட்டுள்ள காரணத்தால் இந்தியாமேல் பற்றும் பாசமும் வைத்திருந்தனர், வைத்திருக்கின்றனர்.

1947 இல் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது தமிழீழத்திலும் ''வந்தே மாதரம்'' ஒலித்தது.

ஏன் இந்தக் களிப்பு? ஏன் இந்த ஆரவாரம்?

பாரத மக்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்குமிடையில் ஓர் ஆத்மார்த்தமான பிணைப்பு- தொடர்பு- இருப்பதே காரணம். இந்திராகாந்தி கொலை செய்யப்பட்ட போது, தமிழீழம் முழுவதும் சோக மயமாகக் காட்சியளித்தது. இந்தியாமேலும் இந்திய மக்கள் மேலும் தமிழீழ மக்கள் கொண்டிருந்த அன்புப் பிணைப்பே இதற்குக் காரணம்.

இந்தப் பிணைப்பு இப்போது அறுந்து விட்டதா?

இந்திய அரசியல் வாதிகள் அரசியல் இலாபத்திற்காக காலம் காலமாக இந்திய மக்களுக்கும் தமிழீழ மக்களுக்கும் இடையில் இருந்து வந்த பிணைப்பையும் தொடர்பையும் அறுக்கவும், அழிக்கவும் முற்பட்டுள்ளனர்.

இந்திரா காங்கிரஸ் தலைமைப்பீடம் ஸ்ரீலங்கா அரசின் நட்புறவுக்கே முன்னுரிமை கொடுக்கிறது.

ஸ்ரீலங்கா அரசின் நல்லெண்ணம் எதுவிதத்திலும் பாதிக்காத வண்ணம் செயல்படுவதில் இந்திய அரசு மிகவும் அவதானமாக இருக்கிறது.

ஆயிரக்கணக்கான தமிழீழ மக்கள் கொன்று குவிக்கப்பட்டும் மௌனமாக இருக்கும் பாரதம், ஸ்ரீலங்கா அரசுடனான நல்லுறவு பாதிக்கப்பட்டு விடுமே என்று தயங்குகிறது.

இத்தனைக்கும் தான் ஒரு வல்லரசு என்ற இறுமாப்புடன் இருக்கிறது.

விடுதலைப்புலிகள் சம்பந்தமாக இந்தியா கொண்டுள்ள நிலைப்பாட்டை அறிவதற்கு ஹேரத் இந்தியா சென்றுள்ளார். தமிழ் மக்களைத் தனது எதிரியாகக் கருதும் ஸ்ரீலங்கா அரசு, தமிழர்கள் இந்தியாவுக்கும் எதிரிதான் என்று பூச்சாண்டி காட்டப்போகிறார் வெளியுறவுக் கொள்கையில் அதுவும் தமிழர் பிரச்சினையில் ஓர் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிராத இந்திய அரசு ஹேரத்தின் மாய வலையில் சிக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பாலஸ்தீன விடுதலைப் போராளிகளுக்கு அரபு நாடுகளின் உதவிகள் கிடைக்கின்றன. குர்திஷ் மக்களின் சுதந்திர தாகத்தை ஈரான், துருக்கி மட்டுமன்றி மேற்கத்திய நாடுகளும் மதித்து ஆதரவு நல்குகின்றன.

சோவியத் யூனியனிலும் யூகோஸ்லேவியாவிலும் சுயாட்சி கோரிப்போராடும் மக்களுக்கு அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் தார்மீக ஆதரவை வழங்கியுள்ளன.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ள சில மேற்கு நாடுகள் நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.

எமது விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தர வேண்டிய இந்தியா வேடிக்கை பார்க்கிறது. தனது தார்மீகக் கடப்பாட்டை தட்டிக்கழித்துவிட்டு தன்னைத் தவிர்த்து எந்தத் தீர்வும் சாத்தியமில்லையென அடம்பிடிக்கிறது.

## சிங்கராயர் சிகிச்சை பெறுகிறார்

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த அருட்திரு. சிங்கராயர் (அ. ம. தி) அடிகளார் யாழ் போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். (79)

## ஜனசக்தி கொடுப்பனவை வழங்க அரசு இப்படியொரு நிபந்தனை

ஜனசக்தித் திட்டத்தை வடக்குக் கிழக்குப் பகுதியில் அமுல் செய்வதற்கு இன்னும் ஏற்ற சூழ்நிலை ஏற்பட்டுவிடவில்லை என ஜனசக்தி ஆணையாளர் நேற்று முன் தினம் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாட்டின் வடக்குக் கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஜனசக்தித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

அமைதி திரும்பினால் மட்டுமே வடக்குக் கிழக்கில் இத்திட்டம் மீண்டும் அமுல் செய்யப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தெற்கில் போதை மயக்கம்

### விஸ்வரூபமெடுக்கிறது என்கிறார் மந்திரி

தென்பகுதியில் வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் பழக்கம் அரசுக்குத் தற்பொழுது பெரும் தலையிடியைக் கொடுத்து வருவதாக அமைச்சர் தயாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த போதைப்பொருள் பாவனை நாட்டின் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு ஒப்பானது எனவும் அங்கு அமைச்சர் தெரிவித்தார்.

## ஆங்கில ஆசிரியர் பரீட்சை ஆகஸ்ட் 15இல் நடைபெறும்

ஆங்கில ஆசிரியர் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடாத்தப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை ஜூலை 24 ஆம் திகதி நடாத்தப்படத் தீர்மானிக்கப்பட்டிருந்ததாயினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அது பிற்போடப்பட்டிருந்தது தெரிந்ததே. (32)

## அங்கீகாரமின்றி நூலகர் நியமனம்; அமைச்சரிடம் புகார்

வவுனியா நகரசபை நூலகத்தில் மாகாண சபையின் அங்கீகாரமின்றியும் வர்த்தமானியில் விளம்பரம் செய்யப்படாமலும் நூலக உதவியாளர் நியமனங்கள் செய்யப்பட்டமை குறித்து உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்த நியமனம் வழங்கும் விடயத்தில் வவுனியா நகரசபை ஆட்சேர்ப்பு விதிகளைக் கடைப்பிடிக்காமல் செயற்பட்டுள்ளதாகவும் அமைச்சருக்கு அம் புகார்க்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## இருநாடுகளுக்கும் இப்போது ஒரே விதமான ஆபத்தாம்

இலங்கையும் இந்தியாவும் தற்பொழுது ஒரே விதமான ஆபத்தையே எதிர்நோக்குவதாக அமைச்சர் ஹெரால்ட் ஹேரத் புதுடில்லியில் தெரிவித்திருக்கிறார்.

இதனால் பொதுவான எதிர்நடவடிக்கையை இரு நாடுகளும் மேற்கொள்ள வேண்டுமெனவும், இலங்கையும் இந்தியாவும் இணைந்து பயங்கரவாதத்தை முறியடிக்க வேண்டுமெனவும் அவர் அங்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட விருந்துபசாரத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

□ □

## முதலுதவி

யாழ் கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவில் முதலுதவிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான கூட்டம் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி பெற்ற அங்கத்தவர்கள் யாவரையும் தவறாது பங்குகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## அகதிகளைத் திருப்பி அனுப்ப இரு நாடுகளும் விரைவில் ஒப்பந்தம்

தமிழ் நாட்டிலும், ஒரிஸாவிலும் உள்ள இரண்டு லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது குறித்து விரைவில் இரு நாடுகளும் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளவுள்ளதாக டில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்துத் தற்பொழுது டில்லியில் தங்கியுள்ள இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹெரால்ட் ஹேரத் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தியுள்ளார்.

இலங்கை அகதிகள் இலங்கைக்குத் திரும்ப இந்த ஒப்பந்தத்தில் காலவரையறை விதிக்கப்படமாட்டாது எனவும், அகதிகள் தாமாகவே தமது ஊர்களுக்குத் திரும்ப ஊக்குவிக்கப் படுவார்களெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 400 க்கும் மேல் பலி

இந்தியாவில் வெள்ளப் பெருக்குக் காரணமாக இரு மாநிலங்களில் 400 க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

மகாராஷ்டிரத்தில் அணைக்கட்டு ஒன்று உடைப்பெடுத்ததில் 100 க்கும் மேற்பட்டோர் பலியானார்கள், 500 பேர் காணாமல் போய்விட்டனர், மூன்று கிராமங்கள் நீரில் முற்றாக மூழ்கிவிட்டன, 1500 பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

ஒரிஸாவில் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் நீர் மின்சார உற்பத்திச் சுரங்கமொன்றினுள் ஆற்று நீர் புகுந்ததில் சுரங்க அமைப்பில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பலியானார்கள்.

## லெப்.சின்ன சுதா விளையாட்டரங்கு

மாவீரன் லெப்டினன்ட் சின்னசுதாவின் 45 ஆம் நாள் நினைவு தினம் இன்று அராலியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு அராலி மாவத்தை விளையாட்டு மைதானத்திற்கு இன்று பிற்பகல் லெப்டினன்ட் சின்ன சுதாவின் பெயர் சூட்டப்படவுள்ளது.

---

தாள அலங்கார விவகார வித்துவமணி
என். ஆர். சின்னராஜா அவர்களின் புதல்வர்கள்

என். ஆர். எஸ். ரவீந்திரன் அவர்களும்
என். ஆர். எஸ். சுதாகரன் அவர்களும்

தம் தந்தையார் நினைவாகச் செய்யும்

## நாதாஞ்சலி

இடம் : மல்லாகம் பழம்பிள்ளையார் கோவில்
காலம்: 2 - 8 - 1991 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணி

நாதஸ்வரம்

அளவெட்டி என். கே. பத்மநாதன்
கோண்டாவில் வி. கே. பஞ்சமூர்த்தி

தவில்

கே. ஆர். புண்ணியமூர்த்தி
கே. நித்தியானந்தம்
என். ஆர். எஸ். ரவீந்திரன்
என். ஆர். எஸ். சுதாகரன்

08020 மல்லாகம் மக்கள்

---

## அளவெட்டியில் பிரார்த்தனை

தமிழீழ மண்மீட்புப் போரில் ஈடுபட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு வெற்றி ஆசி வேண்டியும், போரில் காயமடையும் வீரர்கள் விரைவில் குணமடைய வேண்டியும், மரணித்த மாவீரர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும், அளவெட்டி வடக்கு முதலியவேள் ஆலயத்தில் 2 - 8 - 91 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், பிரார்த்தனையும் நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

08001 ஆலய நிர்வாகசபையினர்

# பாஷையூர், தென்மராட்சியில் வீர வேங்கைகளுக்கு அஞ்சலி

ஆனையிறவு யுத்தத்தில் நேற்று முன்தினம் வீரமரணமடைந்த திருமலையைச் சேர்ந்த வேங்கை சோழன் (மாணிக்கராசா ஸ்ரீசங்கர்) புகழுடல் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பொதுமக்கள்ளின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பெருந்தொகையான மக்மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

மாலை 4. 30 மணியளவில் வேங்கையின் புகழுடல் இராணுவ மாரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது.

வீரமரணமடைந்த றெனோ (ஜெயசிங்கம் மதியழகன் கைதடி), தியாஸிஸ் (செல்வரட்ணம் சங்கர் நுணாவில்) ஆகிய இரு வேங்கைகளின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க்கலவன்பாடசாலையில் வைக்கப்பட்டன.

பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து அஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றது.

பின்னர் மாவீரர்களின் புகழுடல்கள் இராணுவ மாரியாதைகளுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. தியாஸிஸ் உடல் தீயுடன்சங்கமமாகியது.

றெனோவின் புகழுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. (07)

# தென்னை, வாழைகளை வெட்டி அழிக்க வேண்டாம்

வீரமரணமடைந்தவர்களின் அஞ்சலிக்காகப் பயன் தரும் மரங்களான வாழை, தென்னை, கமுகு ஆகியவற்றை வெட்ட வேண்டாமென்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறிப்பாகத்தென்னம்பாளையை வெட்டுவதால் எதிர்காலத்தில் எமது பொருளாதாரம் பாதிக்கப்படுமெனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக சிவப்பு-மஞ்சள் நிறத்தாள்களைப் பயன்படுத்துமாறும் கேட்டுள்ளனர். 01

# பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்க அனுமதி

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கும் தற்போதைய நிலையில் காலை முதல் மாலை 8மணிவரை பருத்தித்துறை துறைமுகத்தில் உணவுப் பொருள்களைக் கப்பல்களில் இருந்து இறக்குவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுளளது.

இதனையடுத்து நேற்று நண்பகல்முதல்பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்கள் இறக்கும் பணிகள் ஆரம்பமாகின.

காங்கேசன்துறையில் தங்கி நின்ற கப்பல் ஒன்று பருத்தித்துறைக்கு நேற்று வந்தது.

இதேவேளை திருகோணமலையில் மா ஏற்றிக்கொண்டிருக்கும் மற்றொருகப்பல் சில தினங்களில் இங்கு வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (02)

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

தொண்டர் ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிமை நண்பகல் 12 மணியளவில் யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் நடைபெறவுள்ளது, 14

## சாரணர் கூட்டம்

15 வயதிற்கு மேற்பட்ட சாரணியர்களுக்கும்' சாரணிய வழிகாட்டிகளுக்குமான ஆலோசனைக் கூட்டம் இன்று வியாழக்கிழமை 3.30 மணியளவில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என சாரணிய மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## ஆனையிறவுப்...

சென்றால் கூட அங்கு உறுதியாக முன்னர் போன்று நிலைத்து நிற்க முடியுமா என்பது சந்தேகமே என பி.பி.ஸி. கருத்துத்தெரிவித்தது..

## அ.தி. மு. க...

தமிழகத்திலுள்ள சிலர் அமைச்சர் சிதம்பரத்தையும், அருணாசலத்தையும் ராஜினாமாச் செய்யுமாறு கோருகின்றனர். இது வியப்பைத் தருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

அ. தி மு. க வின் போக்கையே பழனியாண்டி மறைமுகமாகத்தாக்கியுள்ளார் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

★ கொழும்பு நாளிதழ் தகவல்:

# ராணுவத்துக்கு 300 ட்ராக்டர்கள்!

# கப்பல் மூலம் தருவிப்பு

ஆனையிறவில் 'பலவேகய' தாக்குதலில் பயன்படுத்துவதற்கென இராணுவம் உழவு இயந்திரங்களைத் தருவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலிருந்து இந்த நடவடிக்கைக்காக 300 உழவு இயந்திரங்கள் கப்பல் மூலம் வெற்றிலைக்கேணிக்கு அனுப்பப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சை மேற்கோள் காட்டிக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில்

# உலர் உணவு விநியோகத்தை உடனடியாக நிறுத்த உத்தரவு

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உலர் உணவு விநியோகத்தை அகதிமுகாம்களைத்தவிர ஏனையவர்களுக்கு இன்றுமுதல் உடனடியாக நிறுத்திவைக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கமூலம் நேற்று இந்தஅறிவிப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு வழமையாகவே உலர் உணவு நிவாரண விநியோகத்தைச் சீராக அமுல் செய்ய முடியவில்லையென அப்பகுதிகளில் உள்ள செயலகங்களில் இருந்து தெரியவருகிறது,

இப்பகுதிகளில் உள்ள அகதிமுகாம்களுக்கும் சீராக உணவு விநியோகம் நடைபெறவில்லையெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இவ்வாறு அறிவித்து இருப்பது இப்பகுதி மக்களை மேலும் பட்டினியில் வாட வழிவகுக்கும் எனவும் இப்பகுதியில் உணவுப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன 02)

## மாணவரவை கூட்டம்

இன்று காலை 10. 00 மணிக்கு மாணவரவை நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான கூட்டம் நடைபெற இருக்கின்றது. இக் கூட்டத்தில் போர்க்காலச் சூழ் நிலையில் வேலைத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்படும்.

# அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானது

வல்லரசுகளிடையிலான அணு ஆயுதக் குறைப்பிற்காக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ரஷ்ய - அமெரிக்க ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்தானது.

முப்பது வீதமான நீண்டதூர அணு ஆயுதங்களைக் குறைப்பதற்கான ஸ்ராக் எனும் இவ்வொப்பந்தத்தில் கொர்பச்சேவும், ஜோர்ஜ் புஷ்சும் கைச்சாத்திட்டனர்.

## முன்னேற...

கினர்.

மோதல்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகப் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## யாழ் ..

தாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கலைப்பீடத்தில் 232 பேர் புதிய கல்வியாண்டிற்குத்தெரிவாகியும் 150 பேரே பதிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேபோலவே மற்றைய பீடங்களிலும் மாணவர்களின் தொகை குறைவாகவுள்ளதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அநேகமான விண்ணப்பங்கள் தபால் மூலம் பதிவு செய்யப்படலாமெனவும் இவ்வாறான விண்ணப்பதாரிகள் கொழும்பில் தங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. 06

## இராணுவத்தில் ..

களாம்.

இவ்வாறான பிரசாரத்தையடுத்துச்சிங்களஇளைஞர்கள், யுவதிகள் தமது பெயர்விவரங்களை பதிவு செய்துவருவதாக கொழும்பிலிருந்துவந்தவர்கள் தெரிவித்துள்ளனர். (01)

## வீரமரணம்

ஆனையிறவு மோதலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குண்டு வீச்சில் மரணமான தேசபக்தர் தேவன் (சி. ஸ்ரீயானந்தம் சண்டிலிப்பாய்) அவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கொழும்பில்...

அடுத்தே இவை அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக இந்தப் பாஸ்போட்டுக்கள் கொழும்பில் தவம் கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6)

## இந்திய ..

வம்சாவளியினர் பற்றிப் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1983 இனக்கலவரத்தையடுத்து தலைமன்னார்-தனுஷ்கோடி கப்பல்சேவை நிறுத்தப்பட்டதாலும், பெருமளவு இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவுக்குச் சென்றதாலும் இந்திய வம்சாவளியினர் இந்தியா செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

1983 இல் இருந்து இலங்கைத் நமிழ் அகதிகள் பெருமளவிற்கு இந்தியாவிற்குச் சென்றதால் அன்றைய பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை அகதிகள் நாடு திரும்பிய பின்னரே இந்திய வம்சாவளியினரை இந்தியா ஏற்றுக் கொள்ளுமெனத் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# சிபார்சு செய்த நோயாளர் 4 ஆம் திகதி பதிவு செய்யவும்

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட கடும் நோயாளர்களை 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி முதல் மாலை 3மணிவரை யாழ் பெரியாஸ்பத்திரியில் பதிவு செய்யுமாறு ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்நோயாளர்களுடன் கூடச் செல்லவுள்ள உறவினர்களும் சகல ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (07)

# உயர் கல்வியை மாணவர்கள் தொடரமுடியாத நிலை

பல்கலைக்கழக அனுமதி, திறந்த பல்கலைக்கழக நேர்முகப்பரீட்சை போன்றவற்றிற்கு பிறப்புச் சாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியாது இருப்பதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ் செயலகத்திலும், பருத்தித்துறை பதிவாளர் அலுவலகத்திலும் தற்போதைய நிலையில் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்படும் சிரமங்கள் பற்றி மாணவர்கள் மேற்படி கல்வி நிறுவனங்களுக்கு எடுத்துக் கூறிய போதிலும் மூலப் பிரதியே சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது,

இதனால் மேற்படி கல்வி நிறுவனங்களில் தமது கல்வியை ஆரம்பிக்க முடியாதிருப்பதாக இந்த மாணவர்கள் தெரிவிகின்றனர். 01

## காலமானார்

## V. M. கணபதிப்பிள்ளை

(V. M. K. & SONS உரிமையாளர்)

சாவகச்சேரியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் திரு. V. M. கணபதிப்பிள்ளை (V. M K. & Sons) உரிமையாளர் காலமானார். இவர் காலஞ்சென்ற சாந்தநாயகியினதும், பராசக்தியினதும் கணவரும், சிவபாக்கியம், ஜெயலட்சுமி, புலேந்திரன், குலேந்திரன், சீதாலட்சுமி, ராதாலட்சுமி ஆகியோரின் தகப்பனும், காலஞ்சென்ற க. செல்லத்துரை (பாடசாலை அதிபர் விக்னேஸ்வரா), சி. தர்மேந்திரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), P. யோகதாசன் (பொறியியலாளர் கனடா), அ வசந்தகுமார் (பொறியியலாளர் சவுதி அரேபியா), நிர்மலராணி, திகழ்மதி, ஆகியோரின் மாமனும், அகல்யா (விஞ்ஞானபீடம், யாழ் வளாகம்), கௌசல்யா, லாவண்யா, மீரா, (வேம்படி மகளிர் கல்லூரி மாணவியர்), பார்திபன் (பரியோவான் கல்லூரி), மாதங்கி, பிரசாத், கோகுல், கார்த்திகா, அபிராஜிதன், மேனகா, ரேகா, கல்பனா, ஆதித்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01-08-91 இன்று மாலை 4மணி அளவில் அவரின் இல்லத்தில் இருந்து சரசாலை வடக்கு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. புலேந்திரன்
(மகன்)

V. M. K நகைமாளிகை,
சாவகச்சேரி.

08021

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 01.08·91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.